வர்த்தக ஒலிபரப்பில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்காக கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தால் மொத்தம் ரூ. 3,980 செலவழிக்கப்பட்டது.

மேலும், அரசு வெளியிடும் பரிசுச் சீட்டுக்காக விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு வானெலி வர்த்தக ஒலிபரப்பில் விளம்பரம் கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த செப்டம்பர் 1969 முதல் ஜூலை 1970 வரை மொத்தம் ரூ. 57,047–50 காசு மேற்படி விளம்பரத்துக் காகச் செலவழிக்கப்பட்டது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவரவர்களே, "சட்டசபையில் இன்று" என்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியை வானெலி நிலையத்தினர் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். ஆனல் அது மாநிலச் செய்தி அறிக்கையை அடுத்து ஒலிபரப்பப்படுவதால், பொது மக்களுக்கு வசதியாக இல்லை. எனவே, அதனை மாற்றி, பொது மக்கள் எல்லோரும் கேட்கும் அளவில் அந்த நிகழ்ச்சியை ஒன்பதே கால் மணிக்கு ஒலிபரப்புவதற்கு அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இதில், முதன்மைக் கேள் விக்கும் இந்தக் கேள்விக்கும் எள்ளளவுகூட சம்பந்தமில்லையென்ரு லும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன இந்த விஷயமும் வானெலியிலே ஒலிபரப்பப்பட்டு, பிறகு அதை அவர்களே கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. விநயகம் : நம்முடைய அரசாங்கம் நடத்தும் பரிசுச் சீட்டிற்கான விளம்பரத்தைக் கேட்கும்பொழுது, அதிலே வரும் குடுகுடுப்பைக்காரர் எல்லோருக்கும் ஒரு இலட்சம் வரும், எல் லோருக்கும் ஒரு லட்சம் வரும் என்று சொல்கிருரே. நீங்கள் கொடுப்பது யாருக்கோ ஒருவருக்குத்தானே. விளம்பரம் செய் வதற்கும், நீங்கள் நடைமுறையிலே நடத்துவதற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறதே, அதற்கு யார் காரணம்?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : குடுகுடுப்பைக்காரர் சொல் கிருர் என்று சொல்கிருர்கள். குடுகுடுப்பைக்காரர்கள் ஊரிலே வந்து, நல்ல காலம் பிறக்குது, நல்ல காலம் பிறக்குது என்று சொல்லுவார்கள். ஆனல் எல்லோருக்கும் நல்ல காலம் பிறந்து
10–00 மு. ப. விடாது. சிலருக்குத்தான் பிறக்கும்.

Clash between D.M.K. and Right Communists.

* 136. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there were clashes between the D.M.K. and the the Right Communists in Bhavani taluk about the 25th September 1969?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : பவானி வட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் இடையே 1969 செப்டம்பர் 23-ம் நாளன்று கைகலப்பு நிகழ்ந்தது. இது குறித்து இரு தரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனல், போதுமான சாட்சியங்கள் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.